உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

| மலர் 37 | காளயுக்தி – சித்திரை – 10—5—78 | இதழ் 6 |
| --- | --- | --- |

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## குருவருள் பெற்றுக் குவலயம் வாழ்க!

**அரியபேறு :**

பெறுதற்கு அரிய பிறவி மானுடப்பிறவி. ' அரிது அரிது மானிடராதல் அரிது ' என்பது ஆன்றோர் வாக்கு. கிடைத்தற்கரிய இம் மானுடப் பிறவியின் நோக்கம் ஈட்டியும், உண்டும், உடுத்தும், துய்த்தும் மாய்வது அன்று. நோய்களிலெல்லாம் கொடியதும், தீராததுமாகிய நோய் பிறவிநோய். கிடைத்திருக்கும் மானுட யாக்கையினைப் பற்றுக்கோடாகக்கொண்டு, மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லானாகிய சிவபெருமானின் திருவருள் துணையோடு பிறவா யாக்கை பெற முயல்வதே அறிவுடைமையர்க்கும். பொய்மாயப் பெருங்கடலாகிய வாழ்க்கையிலிருந்து, மெல்ல மெல்லக் கரையேறி இறைவன் திருவடிப்பேறாகிய ஆனந்தப் பெருவாழ்வை உயிர்கள் அடைதலே வீடுபேறு என்றும், முத்திநிலை என்றும், வானோர்க்குயர்ந்தபதம் என்றும் சான்றோர்களால் குறிக்கப்பெற்றன.

**இறைவன் கருணை :**

மலமாகிய பெரும்கட்டுள்கிடந்து உழலும் சிற்றுயிர்கள் தாமே முயன்று, அவற்றினின்றும் விடுபட்டு உய்தல் என்பது இயல்வதில்லை.

தடங்கருணைப் பெருங்கடலாகிய சிவபெருமான், உயிர்கள்மாட்டுக் கொண்ட அளப்பருங்கருணையால், உயிர்களின் பக்குவத்திற்கு ஏற்பத் தாமே குருமூர்த்திகளாக எழுந்தருளிவந்து, மலமகற்றிப் பரிபாகம் உறச்செய்து முத்திநிலை அருளுகின்றான் என்பது நமது சைவ - சித்தாந்த சாத்திரங்கள் விளக்கும் செய்திகளாகும். இதுபற்றி, நமது தருமையாதீன நான்காவது குருமூர்த்திகளால் தடுத்தாட்கொள்ளப் பெற்ற அருளாளரும், ஸ்ரீகாசி மடத்தைத் தோற்றுவித்தருளியவருமாகிய ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் குறிப்பிடும் அரிய செய்திகள் ஆழ்ந்து நோக்கத்தக்கன. ஐந்து வயதில் ஊமை நீங்கப்பெற்று, திருச்செந்திலம்பதி முருகப்பெருமான்மீது அவர்கள் பாடியருளிய கந்தர் கலிவெண்பா குட்டிக் கந்தபுராணம் எனப் பாராட்டப்படுவது. சாத்திரநலம் பொதுளிய தோத்திரமாகத் திகழ்வது. அன்போடு பாராயணம் செய்வாருக்குப் பழுத்த தமிழ்ப்புலமை பாலித்தருளுவது. பரம்பொருளே உயிர்கள்மீதுகொண்ட அளப்பருங்கருணையால் குருநாதனாக எழுந்தருளிவந்து ஆட்கொண்டருளுகின்றான் என்பதனைக் குமரகுருபரர் விளக்கியருளும் பாங்கு உளங்கொண்டு போற்றி மகிழத்தக்கது.

**குருபரன் வருகை :**

எந்த ஒரு பொருள் போதமும் காணாதை போதமாக உள்ளதோ, பந்தங்கடந்த பரஞ்சுடராகத் திகழ்கிறதோ, எது எங்கும் செறியும் பரமசிவமோ, எந்தப்பொருள் மனுதிகளுக்கும் எட்டாத வடிவாய் எவ்வுயிர்களுக்கும் தஞ்சமென நிற்கின்றதோ, அந்தப் பரம்பொருள், இந்திரசாலவித்தைபுரிவோன் தான் தன்னாற்றலால் பிறரை எல்லாம் மயக்கியும் தான் மயங்காது நிற்றல்போல, கருவின்றிநின்ற கருவாயும், உருவின்றிநின்ற உருவாயும் திகழ்கிறது. இத்தகு மேலான பரம்பொருள், உலக வாழ்வாகிய மயக்கத்தில் கிடந்து உழலும் உயிர்கள் மாட்டுக்கொண்ட கருணையால் தாம் தன்னிலையினின்றும் இறங்கி உயிர்களை ஆட்கொண்டருளுகின்ற பெருங்கருணையினை குமரகுருபர சுவாமிகள்,

> " — இருள்மலத்துள்
> மோகமுறும் பல்லுயிர்க்கும் முத்தி அளித்தற்குமல
> பாகமுறவே கடைக்கண் பாலித்துத் — தேகமுற "

என்று குறிப்பிடுகின்றார். உயிர்களின் வினைகட்கு ஈடாகப் பல்வேறு பிறவிகளை வழங்கும் பெருமான், இவ்வுயிர்கள்மாட்டு ஈடேற்றத்திற்குரிய அறிகுறிகள் தோன்றும்வரை காத்திருந்து, அவ்வறிகுறி காணப்பட்டவுடன் அகச்சமயத்துட்புகுத்தி, அச்சமயத்திற்குரிய விரதங்கள் ஆச்சிரமங்கள் முதலியவற்றை அனுட்டிக்கச்செய்து, சரியை முதலிய மூன்றினையும் ஒன்றன்பின் ஒன்றாகச் சேர்ப்பித்து, மூவகை பதமுத்திகளையும் அனுபவிக்கச்செய்து, அக்காலே தெளிந்த அறிவை விரிவடை

யச்செய்து சத்திநிபாதம் தருதல்பொருட்டு, இருவினை ஒப்பும் மலபரிபாகமும்வர ; இவ்வாறு கறங்கும் சகடமும்போல் பிறவிச்சுழலிற்பட்டு உழலும் உயிர்கள்மாட்டுப் பெருங்கருணைகூர்ந்து தன் பரநிலைவிட்டு அருள்பாலித்தற்காகக் குருபரனுய் எழுந்தருளுகின்ருன்.

> " அறிவுக்கு அறிவாகி அவ்வறிவுக்கு எட்டா
> நெறியிற் செறிந்தநிலை நீங்கிப் — பிறியாக்
> கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
> குருபரன் என்றுஓர் திருப்பேர் கொண்டு "

என இறைவனது பெருமையையும், அவனது பெருங்கருணைத்திறத்தையும் கந்தர்கலிவெண்பா விளக்குகின்றது.

**மானுடவடிவில் :**

இவ்வாறு குருபரனுக எழுந்தருளும் பெருமான் மானுடச் சட்டை தாங்கி, உயிர்களோடு உடலும் உயிரும்போல் ஒன்ருயும், கண்ணொளியும் கதிரொளியும்போல் வேருயும், கண்ணொளியும் ஆன்ம அறிவும் போல் உடனுயும் சுத்தாத்துவிதநிலையில்நின்று அருள்பாலிக்கின்ருன். அவ்வாறு கருணைதிருவுருவாய்க் காசினியில்தோன்றிய பேரருளாளர்களுள், இற்றைக்கு 450 ஆண்டுகளுக்குமுன் பாண்டிநாட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்து, மதுரைச் சொக்கநாதப்பெருமானைப் பூஜா மூர்த்தியாகக் கிடைக்கப்பெற்று, கமலை ஞானப்பிரகாசரை ஞானகுருவாகக்கொண்டு, திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தைத் தோற்றுவித்தருளிய அனுபூதிச்செல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள். அவர்களின் பேரருள் இங்கே சிந்திக்கத்தக்கது.

> " கண்ணுதலும் கண்டக் கறையும் கரந்தருளி
> மண்ணிடையில் மக்கள் மலமகற்ற "

வந்த மெய்கண்டதேவரது சந்ததனத்தில்,

> " சீரணியும் நுதலின்விழி, மழு,மான், நாகம்,
> திருந்தும்எரி, பொருந்தும்விடம் தெரிந்திடாமல்
> தாரணி அன்பரைஆள அவர்போல் வந்த "

சைவ சிகாமணியாகத் திகழ்ந்த ஞானனுபவச்செல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர். தமது குருநாதர் ஆணையின்வண்ணம், வில்வாரண்யம் என்ற பெயரோடு மாயூரத்தின் தென்கிழக்கே இரண்டுகல்தொலைவில் காவிரியின் தென்கரையில் அமைந்திருக்கும் தருமபுரத்திற்கு எழுந்தருளி, ஆதீனத் திருமடத்தைத் தோற்றுவித்து வரும்பக்குவிகளுக்கு ஞானேபதேசம் செய்வித்து, அளவிலா அருளற்புதங்களைநிகழ்த்தி, சிவபோகசாரம் முதலிய எட்டு அருள்நூல்களை உலகுக்கு வழங்கி,

தமக்குப்பின்னரும் ஞானமரபு தொடரத் திருவுளம்கொண்டருளிய கருணைவள்ளல் ஸ்ரீ குருஞானசம்பந்தப்பெருமான்.

**வருக வளர்க :**

மூவேந்தர் ஆட்சி தென் தமிழ்நாட்டில் வீழ்ச்சியுற்ற காலந் தொடங்கி இன்றுவரை செந்தமிழையும் சிவநெறியையும் ஒல்லும் வகையெல்லாம் வளர்த்துவரும் திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதீனஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமி களின் குருபூஜைப் பெருவிழா வரும் 18-5-78 தொடங்கி 28-5-78 வரை பதினொரு நாட்களுக்குப் பல்வேறு அங்கங்களுடன் சிறப்பாக நடைபெறவுள்ளது. இறைவனே குருவாக எழுந்தருளி வந்தனன் என்ற மரபின் வண்ணம், ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஜீவசமாதி கொண் டருளிய குருமூர்த்தம் ஸ்ரீ ஞானாம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலாகப் போற்றி வழிபடப்பெறுகிறது. இத்திருக்கோயில் பெருந்திருவிழா குருபூஜை விழாவாகச் சிறப்புற நடைபெறவுள்ளது. குருவழிபாடே சிவவழிபாடாகும்.

" தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே ".

" குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே ".

என்பன திருமூலர் அருளுரைகள். தருமையாதீனத் திருமடத்தில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவையொட்டி சமயப் பயிற்சி வகுப்பும் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடும் நடைபெறவுள்ளன.

சைவப்பேரன்பர்கள் குருவழிபாட்டின் சிறப்பையும் இன்றியமை யாமையையும் உணர்ந்து, தருமையாதீனக் குருமுதல்வரின் குரு பூஜைப் பெருவிழாவில் பங்கேற்று, கண்டும் கேட்டும் உய்திபெறுவார் களாக.

குருவருள் பெருகுக !

குவலயம் வாழ்க !

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26-ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

# *ஆசியுரை

## ஆடம்பரக்கல்வி

மனித உள்ளத்தைப் பண்படுத்தும் மதிநலத்தைக் கல்வி என்று கூறுகிறோம். கல்வி என்ற சொல்லுக்கு அகழ்தல் என்பது பொருள். உயிரைப்பற்றி இருக்கும் அறியாமையை அகழ்ந்து எடுத்தல் கல்வியின் செயலாகும். நல்ல பல நூல்களைக் கற்பதனால் அறியாமை நீங்குகிறது. உயிருக்கு அறிவொளி உண்டாகிறது. கல்வியின் முடிந்த பயன் சிவபரம்பொருளை அடைவதேயாகும். அதற்குத் துணைபுரியும் நூல்களே நூல்களாகும். நன்னூலில் பவணந்தி முனிவர் "அறம், பொருள், இன்பம் வீடடைதல் நூற் பயன்" என்னும் சிறிய நூற்பா ஒன்றால் இதனைத் தெரிவிக்கிறார். அறநெறிகளை அறிதற்கும், அறநெறி வழுவாது பொருள் ஈட்டி இன்பம்நுகர்ந்து முடிவில் வீடுபேறு அடைதற்கும் நூல்கள் உதவல் வேண்டும்

"கற்றதனால் ஆய பயன் என்கொல்? வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்கிறார் வள்ளுவர்.

"உள்ளம் நிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றால் தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன் கழலிற் செறிவு" என்கிறார் சேக்கிழார்.

---

* அகில இந்திய வானொலியில் திருச்சி நிலையத்திலிருந்து 'நெறி விளக்கம்' என்ற தலைப்பில் தாயுமானவர் நெறிபற்றி 9—2—1978 அன்று வழங்கியதைத் தழுவியது. வானொலி நிலையத்தாரின் அனுமதியுடன் வெளியிடப்பெற்றது.

"கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி" என்றும், "கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்" என்றும் கூறப்படும் திருமுறைத் தொடர்களும் இக்கருத்தை உள்ளடக்கி எழுந்தனவேயாகும்.

கல்வி கற்பது மற்றவர்களோடு விவகாரம் செய்வதற்கே என்ற முடிவோடு வாழும் அறிஞர்கள், கல்வியின் பயனை அடையாமற் போவதோடு கல்விக்கே இழுக்குத் தேடவும் செய்கின்றார்கள்.

தர்க்கம் என்பது உண்மையை ஆராய்ந்து காண்பதற்கு உரிய ஒரு வழியாகும். இதனைப் பொய்யை மெய்யாக்குதற்கும் மெய்யைப் பொய்யாக்குதற்கும் பயன்படுத்தும்போது கற்றவர்களையே வெறுத்துக் கூறத் தோன்றுகிறது. கற்றவர்களைவிடக் கல்லாதவர்களே நல்லவர்கள் என்று சொல்லத் தோன்றுகிறது. திருவள்ளுவர் "கல்லாதவரும் நனிநல்லர் கற்றார்முன் சொல்லா திருக்கப் பெறின்" என்று கூறுவார். தாயுமானவர்,

"கற்றதும் கேட்டதும் தானே ஏதுக்காக
கடம்படாம் என்று உருட்டுதற்கோ? கல்லால் எம்மான்
குற்றமறக் கைகாட்டும் கருத்தைக்கண்டு
குணங்குறி அற்று இன்ப நிட்டை கூடவன்றோ!"

என்று அருளிச்செய்கின்றார்.

சில வேளைகளில் மக்களில் கல்லாதவர்களைவிடக் கற்றவர்கள் உயர்ந்தவர்களாக மதிக்கப்பெறுகின்றனர். அதற்குக் காரணம் கல்லாதவர்கள் தவறு செய்யமாட்டார்கள் என்பதேயாகும். படித்தவர்கள் தவறு செய்வார்களேயானால், மக்களை யார் எப்படித் திருத்தி வாழவைக்க முடியும்?

கல்லாதவர்கள் தவறு செய்வதைவிடக் கற்றவர்கள் தவறு செய்யும்போது அத்தவற்றை மிகத் திறமையாகச் செய்வதோடு தாம் செய்யும் தவறுகளையே நேர்மை என்று நிலைநாட்டவும் முனைகின்றனர். இது மக்கள் இனத்திற்குப் பெரும் தீமையாய்முடிகிறது. இப்படிப் பார்க்கும்போது கல்வியைக் கற்றவர்களைவிடக் கல்லாதவர்களே நல்லவர் எனத் தோன்றுகிறது. இதைத் தாயுமானவர் "கல்லாத பேர்களே நல்லவர்கள்" என்று உறுதியாக எடுத்துக் கூறுகின்றார். இதற்குக் காரணம் கற்றவர்கள் செய்யும் தவறுகளே யாகும். கல்வி பிறவிநீங்கிப் பேரின்பநிலை அடைதற்குரிய சாதனம் என்பதைத் திருவள்ளுவர்,

"கற்று ஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்று ஈண்டு வாரா நெறி"

என்ற குறளால் கூறுவர். நமது, ஆதீன ஆதி பரமாசாரியராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர்,

"கற்கஇடர்ப் பட்டுமிகக் கற்றஎல்லாம் கற்றவர்பால்
தற்கமிட்டு நாய்போலச் சள்ளெனவோ — நற்கருணை
வெள்ளம் அடங்கும் விரிசடையாற்கு ஆளாகி
உள்ளம் அடங்கவல்ல வோ"

எனக் கூறுகிருர். கற்றவர்செய்யும் தவறுகளைத் தம்மீதே வைத்துத் தாயுமானவர் கூறும் பாடலைப் பார்ப்போம்.

"கற்றும் அறிவில்லாத என் கன்மத்தை என்சொல்கேன்
மதியை என் சொல்கேன்"

என்று தன்னையே நொந்து கூறுகிருர்.

தாயுமானவர். ஞானம் முக்கியம் என்று ஒருவர் கூறினுல் கர்மங்களைச் செய்வதே உயிர் விளக்கமடைவதற்கு வழியாகும் என்று கூறுவேன்; கர்மம் முக்யம் என்று ஒருவர் கூறினுல் ஞானமே முக்கியமாகும் என்று என்னுடைய வாதத் திறமை யால் நிலைநாட்டிப் பேசுவேன்; வடமொழியில் வல்லவர் ஒருவர் வந்தால் அவரிடம் திராவிட மொழிகளைக் கற்ற அறிவினுல் அவரை மருட்டுவேன்; திராவிட மொழிகளைக் கற்றவர்கள் வந்தால் அவரிடம் வடமொழி வசனங்களைப் பேசி அவர்களை மயக்குவேன்; உண்மையான வெற்றியைப் பெருமல் வாதத் திறமையினுலே நான் பெறுகிற வெற்றிகள் வீடு பேற்றினைத் தருமா? என்று கேட்கிருர். இக்கருத்தமைந்த பாடலைப் பார்ப்போம்.

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றும் அறிவில்லாதஎன்
கன்மத்தை என் சொல்கேன்? மதியை என்சொல்கேன்?
கைவல்ய ஞான நீதி
நல்லோர் உரைக்கிலோ, கன்மம் முக்கியம் என்று
நாட்டுவேன், கன்மம் ஒருவன்
நாட்டினுலோ, பழைய ஞானம் முக்கியம் என்று
நவிலுவேன்; வடமொழியிலே
வல்லான் ஒருத்தன்வரவும் த்ராவிடத்திலே
வந்தவா விவகரிப்பேன்;
வல்லதமிழ் அறிஞர் வரின் அங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிது புகல்வேன்;

வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தை என் முத்தி தருமோ ?
வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே !

இறைவன் திருவருளைப் பெறுதற்குரிய சாதனமாக உதவும் கல்வியை வீண் விவகாரங்கள் செய்வதற்குமட்டும் பயன்படுத்தி உயர்ந்த குறிக்கோளை அடையத் தவறிவிடும் கல்வியாளர்களுக்கு இப்பாடல் நல்லதோர் அறிவுரையாக அமைகின்றது.

---

## திருவாமூரில் ஸ்ரீ அப்பர்சுவாமிகள் திருவிழா

சைவ சமயாசாரியர் நால்வருள் இரண்டாமவராகிய திருநாவுக்கரசு நாயனுர் குருபூஜை விழா, இவர்களது அவதாரத் தலமாகிய திருவாமூரில் ஏப்ரல் 30, மே 1, 2 ஆகிய மூன்று நாட்களும் மிகச் சிறப்பாக நடந்தேறியது. மூன்றுநாள் விழாவிலும் அப்பர் தேவார அருந்தமிழ் மாநாடு, கருத்தரங்கம், பண்ணுராய்ச்சி மாநாடு, சிவ பூஜகர் மாநாடு, பட்டிமண்டபம், வழக்காடுமன்றம், இசையரங்குகள் முதலிய பல்வேறு அரங்கங்களுடன் மிகச் சிறப்பாக நிகழ்ந்தன. விழாவில் தவத்திரு. குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத்தலைவர் ஸ்ரீமத். முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் மற்றும் தமிழகத்துப் புலமை நல மிக்க சான்றோர் பலரும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

2—5—78 குருபூஜை விழாவன்று ஸ்ரீ அப்பர் சுவாமிகளுக்கு விசேட அபிடேக ஆராதனைகளும் மாகேஸ்வர பூஜையும் நிகழ்ந்தன. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அன்று மாலை திருவாமூர்எழுந்தருளி வழிபாடாற்றி, திருவதிகை திரு. என் திருஞான சம்பந்த தேசிகர் அவர்களுக்குத் திருமுறைக்கலாநிதி என்ற பட்டம் வழங்கி, பொன்னுடைபோர்த்து பொற்கிழிவழங்கிஆசீர்வதித்தார்கள். கூடியிருந்த மக்களிடையே ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசியுரை வழங்கினுர்கள், இரவு அப்பர் பெருமானின் திருவீதியுலாக்காட்சி நடைபெற்றது.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசியோடு சிதம்பரத்தைச்சார்ந்த திருவாமூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் விழாக்குழுவினர் விழாவினைத் திட்டமிட்டு நடத்தினர். ஆயிரக் கணக்கானவர்களுக்கு அன்னம்பாலிக்கப்பெற்றது. சிதம்பரத்திலிருந்து புறப்பட்ட பாதயாத்திரைக் குழுவினர் குருபூஜைவிழாவில் பங்கேற்றனர். பல்லாயிரம் மக்கள் மூன்றுநாள்விழாவிலும் கலந்துகொண்டு கண்டும், கேட்டும் உய்திபெற்றனர்.

---

# திருநெடுங்களம் – திருஎறும்பியூர்த் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,
**வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம்.ஏ.,**

( மலர் 37, இதழ் 5, பக்கம் 213 இன் தொடர்ச்சி )

ஐயடிகள்காடவர்கோன் நாயனுர் க்ஷேத்திரத் திருவெண்பாவில் தம் நெஞ்சை விளித்துப் பாடுவதாக அருளிய பாடல் ஒன்றுள்ளது.

> தொட்டுத் தடவித் துடிப்பொன்றும் காணுது
> பெட்டப் பிணமென்று பேரிட்டுக் — கட்டி
> எடுங்களத்தா என்னுமுன் ஏழைமட நெஞ்சே
> நெடுங்களத்தான் பாதம் நினை.

இப்பாடல் பதினுேராம் திருமுறையில் உள்ளது. அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்ப் பாடலும் இத்தலத்துக்கு உண்டு.

**கல்வெட்டுக்கள் :**

இத்திருக்கோயிலில் பல சிறந்த கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றின் மூலமாகப் பல சிறந்த செய்திகளை நாம் அறியலாம். இத் தலத்திறைவர் பெயர் கல்வெட்டுக்களில் நெடுங்களநாத சுவாமி, நெடுங்களத்து மகாதேவர், நெடுங்களம் உடையார், நெடுங்களத்து நாயனுர், ஆழ்வார், தம்பிராஞர், களந்தைநாயகர், கயிலாயத்து மகாதேவர், சோலைவனமுடை நாயனுர், சுந்தரமூர்த்தி என்னும் பல அழகிய திருப்பெயர்களால் குறிக்கப்படுகிருர். இவ்வூர் மாண்டிகுலா சனிவளநாட்டு வடவீரநாட்டுத் திருநெடுங்களம் என்றும், தியாக வல்லி சதுர்வேதிமங்கலம் என்றும் குறிக்கப்படுகிறது.

அக்கல்வெட்டுக்கள், சோழன் மதுரைகொண்ட பரகேசரிவர்மன் (கி.பி. 905-47) இராஜராஜன் I (கி.பி. 985-1013) இராஜராஜன் III, குலோத்துங்கன் III (கி. பி. 1186-1216) ஆதித்யகரிகாலன் II, ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், ஹொய்சள மன்னன், வீரராமநாத தேவன், விஜயநகர இம்மடி நரசாநாயகர், விருப்பண்ண உடையார், வீரநாராயண உடையார், மல்லிகார்ச்சுனராயர், விஜயரங்கசொக்கநாத நாயக்கர் முதலிய அரசர்கள் காலத்தவை.

கோயிலுக்கு நிலதானம், விளக்கெரிக்க நிலம், தினப்படி காக்கைக்குச் சாதம் வைக்க நிலம், பொன் ஆடுகள் வழங்கியது, நெல் தானம், பொன்னுபரணம் கொடுத்தது, நிலவிற்பனை, பஞ்ச கவ்வியத் திற்காகப் பசுக்களை அளித்தது. அக்கினிகாரியத்திற்கு நெய்கொடுத்தது முதலிய செய்திகள் காணப்படுகின்றன. உலக நாதேசுவரமுடையார் இலிங்கத்தைப் பிராகாரத்தில் பிரதிட்டை செய்தது, உலக சுந்தரர் திருவுருவம் நிலைபெறுத்தியது, பிள்ளையார் - கணபதிக்கு விளக்கு எரிப்பதற்காகப் பொன்வழங்கியது, மாசி சித்திரை திருவிழாக் காலங்களில் 550 சிவயோகிகளுக்கு உணவளிக்க நிலம்விட்டது, கோயிலைத் தன் சொந்தச் செலவில் பழுதுபார்த்த ஒருவருக்கு நிலம், வீடுமுதலியவற்றைக் கொடுத்தது, நித்திய பூசை முதலியவற்றிற்கு நிலம் நெல் அளித்தது போன்ற பல அரிய செய்திகளை அந்தக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. பிற்காலச் சோழ மன்னர்களின் அரசாட்சியை முதன் முதலாக நிறுவிய விஜயாலய சோழன் அளித்த தானம் ஒன்றினை உறுதிப்படுத்தியதாகவும் ஒரு கல்வெட்டில் காணப் படுகின்றது. எனவே இத்திருக்கோயில் மிகப் பழமையானதாக இருக்க வேண்டும் என்று தெரிகிறது.

புகழ்பெற்ற இத்தலம் விரைவில் திருப்பணி செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளது. சமய உலகம் பாடல் பெற்ற சிவ தலங்களைப் பழுதடையா வண்ணம் **காத்தல்கடன்** காப்பாற்றுதல் வேண்டும். திருக்கோயில் திருப்பணிசெய்வோர் அடையும் பயனைப் பின்வரும் பழைய பாடல் ஒன்று தெரிவிப்பதைப்பாருங்கள்!

புல்லினால் கோடியாண்டு புதுமண்ணால் பத்துக்கோடி
செல்லுமா ஞாலம்தன்னில் செங்கல்லால் நூறுகோடி
அல்லியங் கோதைகேளாய் அங்கண்மா ஞாலம்தன்னில்
கல்லினால் செய்வித்தோர்கள் கயிலைவிட் டகலாரன்றே.

## திருஎறும்பியூர்

சோழவளநாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருச்சிராப் பள்ளிக்கு அருகில் விளங்குவது திருவெறும்பியூர் என்னும் திருத் தலமாகும். இது திருநாவுக்கரசர் அருளிய இரண்டு திருப்பதிகங்களைப் பெற்றுள்ளது.

**திருவெறும்பியூர் :**

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலங்களில் ஏழாவதாக விளங்குகின்றது. தஞ்சை திருச்சிராப்பள்ளிப் பெருவழியில் உள்ளது. திருவெறும்பூர் என்னும் பெயரில் பெரியநகரமாகத்திகழ்கிறது. கோயில்

திருவெறும்பியூர் புகைவண்டி நிலையத்திற்கு வடமேற்கே ஒருகிலோ மீட்டர் தூரத்திலுள்ள மலைமேல் விளங்குகிறது.

தேவர்கள் எறும்பு உருவம் எடுத்துப் பூசித்த காரணத்தால் எறும்பியூர் என் இத்தலம் வழங்கப்பெறுகிறது. எறும்பு என்ற சொல்லுக்கு எறும்பு யானைஎன்னும் பொருள்கள் உள்ளன. இங்குள்ள மலை யானை வடிவமாக இருத்தலினாலும் எறும்பியூர் எனப் பெற்றது எனக் கூறுவர்.

இவ்வூருக்குத் திருஎறும்பியூர், பிரமபுரம், லக்ஷ்மிபுரம், மதுவன புரம், இரத்தினகூடம், மணிகூடம், குமாரபுரம், தென்கயிலாயம் முதலிய பெயர்களும் உள்ளன. வடமொழியில் பிப்பிலீசுவரம் எனக் கூறப்படும். பிப்பிலி - எறும்பு.

**கோயிலின் அமைப்பு :**

திருக்கோயில் கிழக்குநோக்கி மலைமேல் அமைந்துள்ளது. அடிவாரத்தில் ஒரு பிராகாரம் உள்ளது. மேலே கோயிலுக்குச் செல்ல நூற்றிருபத்தைந்து படிகள் உள்ளன. மலையின்மேல் இரண்டு பிராகாரங்கள் உள்ளன. உட்பிராகாரத்தில் விநாயகர் முதலிய பரிவார தெய்வங்களும் வெளிப்பிராகாரத்தில் அம்பாள் கோயிலும் இருக்கின்றன. சுவாமி கிழக்குநோக்கி விளங்குகின்றார். அம்பாள் தெற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார்.

**மூர்த்திகள் :**

தல விநாயகர் பாலசந்திரவிநாயகர் என்று வழங்கப்படுகின்றார். மூலமூர்த்தியாகிய இறைவர் திருப்பெயர் அருள்மிகு எறும்பீசுவரர் என்பதாகும். மற்றும் மதுவனேசுவரர், மணிகூடாசலபதி, பிபிலிகேசுவரர், மாணிக்கநாதர் என்றபெயர்களும் உள்ளன. கல்வெட்டுக்களில் திருமலை ஆழ்வார், திருவெறும்பியூர் ஆழ்வார் நாயனார், மகாதேவர், பட்டாரகர் முதலிய பெயர்கள் காணப்படுகின்றன.

அம்பாள் திருப்பெயர் அருள்மிகு நறுங்குழல்நாயகி, சௌந்தர நாயகி எனவும் வழங்கப்பெறுகின்றார். தலவிருட்சம் - வில்வமரம். தீர்த்தம் - பிரமதீர்த்தம் (தெப்பக்குளம்). பதுமதீர்த்தம் கோயிலின் வடகிழக்கில் உள்ளது. குமாரதீர்த்தம் கோயிலின் வடபால் உள்ளது.

**தலப்பெருமை :**

ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் ஏற்பட்ட வலிமைப் போட்டியில் மேருமலையின் சிகரங்களை வாயுதேவன் பெயர்த்தெடுத்துப் பல இடங்களிலும் இட்டனன். மேருவின் முக்கிய

சிகரங்களில் ஒன்றைத் திருவெறும்பியூரில் இட்டான். மணிக்கூடம், இரத்தினகூடம் என்னும் பெயர்களையுடைய அம்மலையே திருவெறும்பியூர்மலை எனத் தல புராணம் கூறுகிறது.

**பிரமன் வழிபட்டது :**

நான்முகன் தான்படைத்த பெண்ணை மனைவியாக அடைய விரும்பி அவளைப் பின்தொடர்ந்தான். அப்பெண் பிரமனிடமிருந்து தப்பிக்க ஓடினாள். பிரமனும் அவளைப் பின்தொடர்ந்தான். அப்பெண் திருவெறும்பியூர் இறைவனை அடைக்கலமாக அடைந்தாள். இறைவன் நான்முகனைச் சினந்தார். சிவபெருமானது சினத்துக்கு ஆளாகிய நான்முகன் இத்தலத்தில் பல நாட்கள் தங்கி எறும்பியூர் இறைவனை வழிபட்டு, தன்பிழையை மன்னித்தருள வேண்டினான். இறைவனும் அப்பெண்ணை சரசுவதிதேவியாக்கி நான்முகனுக்கு மணம்புரிவித்து அருள்புரிந்தார். நான்முகன் உண்டாக்கிய தீர்த்தமே பிரமதீர்த்தம். அதில் நீராடி வழிபடுவோர் எல்லா நன்மைகளையும் எய்துவர்.

**திருமால் வழிபட்டது :**

தேவர்கள் திருப்பாற்கடலில் அமுதம் கடைந்தகாலத்தில் தோன்றிய திருமகளைத் திருமாலுக்கு மனைவியாக அளித்தனர். திருமால் திருமகளை நோக்கிச் சிவபெருமான் அருளைப் பெற்ற பிறகே உன்னை மணம்புரிவேன் ; நீ திருவெறும்பியூர் சென்று சிவபெருமானை வழிபட்டு இறைவனருள் பெற்றுவருக என்று கூறி அனுப்பிவைத்தார். திருமகள் இத்தலத்தை அடைந்து தீர்த்தம் உண்டாக்கி நீராடி வழிபட்டுவந்தாள். பெருமான் மகிழ்ந்து திருமாலைத் திருமகளுக்கு மணம் புரிவித்தருளினார்.

**இந்திரன் முதலிய தேவர்கள் எறும்புருவுடன் வழிபட்டது :**

தாருகாசுரன் தன் படைத்தலைவர்களுடன் தேவருலகம் சென்று தேவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினான். இந்திரன்முதலான தேவர்கள் சென்று நான்முகனை அடைக்கலமாக அடைந்தனர். நான்முகன் திருவெறும்பியூர் இறைவனை வழிபட்டால் நலம் உறலாம் என்று கூறினான். தேவர்கள் அனைவரும் ஒரு பாதாளவழியின் மூலமாக எறும்பு உருவத்தோடு இத்தலத்திற்கு வந்து இறைவனை வழிபட்டனர். பெருமான், விரைவில் ஒரு குமாரனைத் தோற்றுவித்து உங்கள் குறைகளை நீக்குவோம் என்று ஆறுதல்கூறி அனுப்பியருளினார். இந்திரன் முதலியோர் ஈயுருவங் கொண்டு மதுதீர்த்தம் உண்டாக்கி மீண்டும் இறைவனை வணங்கி அருள்பெற்றனர். இந்திரன் சாத்திய மலர்களைத் தம் திருமுடிசாய்த்து ஏற்றுக்கொண்ட பெருமான் இன்றும் சிறிது சாய்ந்த நிலையிலேயே காணப்படுகிறார்.

இரதிதேவி இத்தலத்து இறைவனை வழிபட்டுத் தன்கணவனுகிய மன்மதனை மீண்டும் பெற்ருள். சிவபிரானும் உமையம்மையும் கூடி மகிழும் வேளையில் உள்நுழைந்த அக்னிதேவன் அம்மையின் சாபத்திற்கு ஆளாகி இத்தலத்திற்குவந்து வழிபாடுசெய்து திருவருள் பெற்று உய்ந்தான். முருகப்பெருமான் இத்தலத்துவந்து அம்மை யையும் பெருமானையும் வழிபட்டு வேலாயுதம் பெற்ருர். குமாரக் கடவுள் இத்தலத்தில் உண்டாக்கிய தீர்த்தமே குமாரதீர்த்தம் எனப்படும். அகத்திய முனிவருக்கு இறைவன் இத்தலத்தில் திருக் கல்யாணத் திருக்கோலங்காட்டியருளினுர். திரிசிரன் என்பானுடைய தமையனும் எறும்பு வடிவெடுத்து இத்தலத்திறைவனை வழிபட்டு அருள்பெற்றுள்ளான்.

**தலப்பதிகம்:**

இத் தலத்திறைவன்மீது அப்பரடிகள் ஈடுபட்டுப் பாடிய இரண்டு திருப்பதிகங்கள் உள்ளன.

## தலபுராணப் பாடல்கள்

**திருஎறும்பீசர்:**

இறும்பான சிறகர்அரிந்து உலகுயிரைக் காத்த இருங்
குலிக்கை யீசன்
எறும்பான அஃறிணையின் உருக்கொடுநம் இறையவனை
இகவா அன்பால்
நறும்பாத வஞ்செறியும் எறும்பீசன் தனையெய்தி
நண்ணிப் பூசை
உறும்பாசம் அகற்றிடச்செய் எறும்பீசன் அடிமலரை
உன்னி வாழ்வாம்.

**நறுங்குழல்நாயகி:**

மகந்தனையே பலபுரிந்த மகவானும் அமலனடி
மருவும் இன்ப
அகந்தனையெய் திடஎறும்பின் உருக்கொடெறும் பீசத்தே
சூழ்ந்து போற்ற
உகந்தனையான் தனக்குதவும் இறைவனிடப் பாகத்தே
யொருவா தோங்கும்
சுகந்தநறும் குழலமுதை அன்பின்மொழித் தென்பிறவித்
துரிசு தீர்வாம்.

**கல்வெட்டு:**

இத்திருக்கோயிலில் முதலாம் ஆதித்தசோழன் கண்டராதித்தன், சுந்தரசோழன், முதலாம் இராசராசன் முதலானேர் காலங்களில் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவைகளில் இறைவர் திருவெறும்பியூர் ஆழ்வார், திருமலைமேல் மகாதேவர் என்னும்

திருப்பெயர்களால் குறிக்கப் பெற்றுள்ளனர். கல்வெட்டுத் துறையாளரால் முதலாம் ஆதித்தன் கல்வெட்டு என்று கருதப்படும் 'கோவிராஜகேசரிபன்மற்கு யாண்டு நாலாவது' என்று தொடங்கும் கல்வெட்டில் இறைவர் ஸ்ரீகண்ட சதுர்வேதிமங்கலத்துத் தென் கயிலாயத்து மகாதேவர் என்று குறிக்கப்பெற்றுள்ளார்.

**கல்வெட்டுக்களால் அறியப்படும் அரிய செய்திகள் :**

திருவெறும்பியூர் ஆழ்வார்க்கு ஸ்ரீவிமானம் எடுப்பித்தவன் சிறுத ஆருடையான் வேளான் வீரநாராயணனுன செம்பியன் வெய்தி வேளான் ஆவன். இவன் இத்திருக்கோயிலில் மூன்று சந்தியும் உடுக்கையும் தாளமுங்கொண்டு நால்வர் அடிகள்மார் திருப்பதிகம் பாடுவதற்கு நிலநிவந்தம் அளித்திருந்தான். தென்கயிலாயத்து மகாதேவர்க்கு, திருவரங்க தேவரடியாள் சேந்தன் செய்யவாய்மணி சந்திவிளக்கு ஒன்றுக்கும், ஆற்றுத் தண்ணீரமுது தூணிகொள்ளிக் குடத்தால் நிசதி ஒரு குடத்துக்கும்ஆகப் பதின் கழஞ்சு பொன்னை வைத்து அதன் வட்டியால் அவைகளைச் செய்துவருமாறு ஏற்பாடு செய்திருந்தான். மேற்குறித்த செம்பியன் வெய்திவேளான் திருவெறும்பியூர் ஆழ்வார் மலைமேல் சந்திராதித்தவல் பிராமணர் பதினைந்துபேர் உண்பதற்கு நிலநிவந்தம் அளித்திருந்தான்.

---

## அன்னை அருள்மாலை

திருமுறைக் கலாநிதி

**வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.**

சீருலவு திருப்பராய்த் துறையில்பொன் மயிலம்மை
தேனுரும் திருக்கற்குடித்
தேடிவரு வார்க்கருளும் தேவிமைக் கண்ணம்மை
சேவிக்கு மூக்கீச்சரம்
பேருலவு காந்திமதி திருசிராப் பள்ளிவாழ்
பெண்மட்டு வார்குழலியே
பெற்றமே றும்பிரான் பிரியா எறும்பியூர்
பேணிவாழ் நறுங்குழலம்மை
காருலவு நெடுங்களம்ஒப் பிலாநாயகி மேலைக்
காட்டுப்பள்ளி கருத்தில்
காணுதற்கினியநல் வார்கொண்ட முலையம்மை
கைதொழும் ஆலம்பொழில்
பாருலவு பத்தர்நிதம் பணியும் ஞானம்பிகை
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின்மெல் லடியிணைத் தஞ்சம்அடைந் தென்றும்
பணிவேற்கருள் அன்னையே. (8)

# இறைவா! —— உன் ஆலயத்தில்....

தினமலர் நிருபர்

சொத்துள்ள கோயில்களின் அவல நிலைக்கு இதோ இன்னும் ஒரு உதாரணம்.

460 ஏக்கர் நன்செய் நிலம் இருந்தும் இப்போது ஒரு லட்ச ரூபாய்கூட கைவசம் இருப்பு இல்லாத தேவஸ்தானம் பேட்டவாய்த் தலை மத்தியார்ச்சுனேஸ்வரர் ஆலயத்தின் வரலாற்றைத் தெரிந்து கொள்வது சுவையானது. சோழமன்னர்கள் தங்களின் வருங்கால சந்ததியினர் சிவ பக்தியில் இருந்து வழுவாமல் இருப்பதற்காகத் திருவிடை மருதூரில் ஒரு பெரிய சிவாலயத்தை நிர்மாணித்தார்கள். அவர்களின் பரம்பரையில் அடியொற்றி வந்த 3-வது குலோத்துங்க சோழன் காவிரியாற்றின் வெள்ளத்தினால் சோழநாடு சேதமடையாமல் தடுப்பதற்காகத் திருச்சிக்கு அருகே காவிரியில் உய்யக்கொண்டான் என்னும் ஒரு கிளை நதியை வெட்டுவித்து அதற்கு அருகிலேயே ஒரு ஆலயத்தை அமைத்து அதற்குத் திருவிடைமருதூர் ஆலயத்திலுள்ள பெருமானின் பெயரையே (ஸ்ரீ மத்தியார்ச்சுனேஸ்வரர்) சூட்டிப் பேட்டவாய்த்தலை என்னும் கிராமத்தில் அதற்கு நிலங்களையும் இனாமாக எழுதிவைத்தான்.

காவிரியில் வெள்ளம்வருங்காலத்தில் உய்யக்கொண்டான் வழியாக நீரைத்திருப்பிவிடவும் தடுக்கவும் செய்வதற்காக ஓடக்காரர், பாளையக்காரர் என்னும் இருபிரிவினரை ஏற்படுத்தி, அவர்களைக் கோயில் சிப்பந்திகளாகவும், வேலைக்காரர்களாகவும்வைத்து, கால்வாய் வேலைகளையும், கோயிற்காரியங்களையும் கவனித்துவரும்படி 3 வது குலோத்துங்க சோழன் ஏற்பாடு செய்தான். இந்தக் கோயில்பற்றிய கல்வெட்டுக்களை அரசு நகல் எடுத்துள்ளது. கோயிலைச்சுற்றிப் பழைய சிற்பங்களும் காணப்படுகின்றன.

பேட்டவாய்த்தலை என்று இப்போது வழங்கப்படும் ஊருக்கு அருகே காவிரியில் இருந்து பிரியும் உய்யக்கொண்டான் கால்வாய் மூலம் காவிரிநீர்பாயும் தேவஸ்தானம் கோயிலுக்குச்சொந்தமான 430 ஏக்கர் நிலத்தில் இருந்து இப்போது இக்கோயிலுக்குக் கிடைக்கும்

ஆண்டு வருமானம் எவ்வளவு தெரியுமா? சுமார் ஒரு லட்சரூபாய் தான். கோயில் சிப்பந்திகளின் சம்பளத்திற்கும், தினசரி பூஜைகள் நடப்பதற்குந்தான் இந்த வருமானம் போதுமானதாக இருக்கிறது. தமிழ் நாட்டில் பூஜைகூட நடக்காத நிலமுள்ள கோயில்கள் பல இருப்பதாக ஆஸ்திகப் பிரமுகர்கள் மனம் வருந்திச் சொல்லுவதையும் கூடக் கேள்விப்படுகிறோம்.

1945 டிசம்பர் மாதம் முதல் இந்து அறநிலையப் பாதுகாப்பு போர்டின் நேரடி நிர்வாகத்தில் நடைபெற்றுவரும் இந்தக்கோயிலின் ஆண்டுவருமானம் 1950 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தகவலின்படி சுமார் 1500 கலம் நெல்லும், 17000 ரூபாய் ரொக்கமும் ஆகும். நிலத்தின் மதிப்பும் சாகுபடியும் பலமடங்கு உயர்ந்து இருந்தும் இந்த 28 ஆண்டுகளில் கோயிலின் வருமானம் உயர்ந்ததாகத் தெரியவில்லை. சராசரியாகக் கிடைத்துவரும் ஒருலட்சரூபாய் வருமானமும்கூடச் சரியாக வசூல் ஆவதில்லை. கடந்த 5 வருடங்களில் 1,75,000 ரூபாய் குத்தகை வருமான பாக்கியாக இருக்கிறது. குத்தகைதாரர் கடன் நிவாரணச் சட்டம் கோயில் நிலங்களை வைத்திருக்கும் விவசாயிகளையுங்கூடச் சரியாகக் குத்தகைசெலுத்த விடாமல் பாதுகாத்துவருகிறது. புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டதாகக் குத்தகை விவசாயிகள் கூறுகிறார்கள். இது உண்மைதான் என்றாலும் ஆண்டுக்குப் பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை வருமானமாகப் பெறுகின்ற கோயில் நிலக் குத்தகைதாரர்கள் ஒரு ஆண்டில் ஏற்பட்ட புயல், வெள்ளத்தைமட்டும் காரணமாக வைத்துக் குத்தகை பாக்கி வைக்க வேண்டிய அளவுக்குப் பின் தங்கிய நிலையில் இல்லை.

நில உச்சவரம்பு சட்டம் வருவதற்கு முன்பு சில குடும்பங்களின் கையில் கோயில் நிலங்கள் இருந்துவந்தன. 6 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்திற்குமேல் ஒருவருக்கு நிலம் இருக்கக்கூடாது என்று சட்டம் செய்யப்பட்டபின்னர் கோயில் நிலங்கள் பலரது பெயரில் பிரித்து வழங்கப்பட்டன. பேட்டவாய்த்தலை தேவஸ்தானம் கோயிலுக்குச் சொந்தமான 460 ஏக்கர் நிலமும் சுமார் 200 குத்தகை சாகுபடி விவசாயிகளுக்குப் பிரித்துத்தரப்பட்டுள்ளது. ஆனால் இது உண்மையான கணக்குத்தானா? என்ற கேள்விக் குறியும் எழுகிறது.

ஏற்கனவே அதிக அளவில் கோயில் நிலங்களை அனுபவித்து வந்தவர்கள், நில உச்சவரம்பு சட்டம் வந்தவுடன் அதில் இருந்து தப்பித்துக்கொள்ளத் தங்களுக்கு வேண்டியவர்களின் பெயரிலும் உறவினர்களின் பெயரிலும் நிலங்களைப் பிரித்து எழுதி வாங்கிக் கொண்டதாகவும், இப்போதுகூட ஒரே குடும்பத்திற்குச் சுமார் 50 ஏக்கர்வரை கோயில் நிலங்கள் பயன்பட்டுவருவதாகவும் அந்த ஊர்ப் பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு இந்த ஊருக்கு வந்த ஒரு விவசாயி கோயில் நிலங்களைக் குத்தகைக்குச் சாகுபடி செய்ததின் மூலம் படிப்படியாக வளர்ந்து இன்று சொந்தத்தில் சுமார் 75 ஏக்கர் நிலத்திற்கும் பல சொத்துக்களுக்கும் அதிபதியாகிப் பெரிய பணக்காரராக வாழ்ந்துவருகிறார் என்றும், ஆனால் இப்படிப் பலபேரை வாழ வைக்கும் தேவஸ்தானம் மத்தியார்ச்சுனேஸ்வரர்கோயில் எவ்வித அபிவிருத்தியும் இல்லாமல் அப்படியேதான் இருக்கிறது என்றும் சொல்லிச் சிலர் வருத்தப்படுகிறார்கள்.

இந்தப் பகுதியைச் சேர்ந்த கிராம மக்கள் வீடுகளில் திருமண விழாக்களை நடத்த வசதியில்லாமல், மாட்டு வண்டிகளைக் கட்டிக் கொண்டு திருமணம் நடத்த வசதியுள்ள கோயில்களைத்தேடிப் பல மைல்தூரம் பயணம் செல்லுகிறார்கள். 460 ஏக்கர் நன்செய் நிலங்களுக்குச் சொந்தமுடைய இந்தக் கோயிலில் ஒரு திருமண மண்டபம் கட்டுவதற்கு வசதி இல்லையே. கோபுரத்தில் இருந்து உள்மண்டபம் வரை வெயில் எரிக்கும் திறந்தவெளியாக இருப்பதை இணைப்பதற்கு ஒரு நிழல்மண்டபம்கூடக் கட்டமுடியவில்லையே. பேட்டவாய்த்தலை கடைவீதியில் இருந்து தேவஸ்தானம் கோயிலுக்கு வயல்கரை வழியாக நடந்து வருகிறவர்கள் கோயிலுக்கு அருகில் ஓடும் பாசனக் கால்வாயைக் கடப்பதற்குக் கோயில் நிர்வாகம் முன்வரக்கூடாதா? இதை எல்லாம் செய்வதற்குச் சரியானமுறையில் வருமானம் கிடைக்க வேண்டாமா?

சாதாரணமாக ஒரு ஏக்கர் நிலம் குத்தகைதாரர்களுக்கு எப்படிப் பலன் தருகிறது என்பதைப் பார்க்கவேண்டும். கரும்பு, வாழை போன்ற பணப்பயிர்கள் சாகுபடியாகும் நிலங்களுக்கு ஏக்கருக்கு 700 ரூபாய் குத்தகைப்பணம் வசூலிக்கப்படுவதாகத் தெரிகிறது. ஆனால் இந்த நிலங்களில் கிடைக்கும் வருமானம் எவ்வளவு தெரியுமா? ஒரு ஏக்கர் நிலத்திற்குக் கரும்பு, வாழையில் சாகுபடி செலவு போக 4000 ரூபாயில் இருந்து மகசூலுக்குத் தகுந்தபடி 10,000 ரூபாய்வரை வருடத்திற்கு வருமானம் கிடைக்கும். பொது மக்களிடமிருந்து கேள்விப்படுவது உண்மையாக இருக்குமானால் கோயில் நிலங்களை 20 ஏக்கர், 30 ஏக்கர், 50 ஏக்கர் என்று சட்டத்திற்குப் போக்குக்காட்டிவிட்டு வெவ்வேறான பெயர்களில் அனுபவித்துவரும் பல பெரிய குடும்பங்களுக்கு ஆண்டு வருமானம் எவ்வளவு கிடைக்கும் என்பதை எண்ணிப்பார்த்து வியப்படையாமல் இருக்கமுடியாது.

ஒரு ஏக்கருக்குச் சராசரியாக 4000 ரூபாய் வருமானம் என்று வைத்துக்கொண்டால் 460 ஏக்கருக்கும் ஆண்டுவருமானம் 18 லட்ச ரூபாய் ஆகிறது. ஆனால் தேவஸ்தானம் பேட்டவாய்த்தலை கோயிலுக்குக் கிடைப்பதோ சுமார் ஒருலட்சரூபாய்தான். கோயில்சொத்து

எப்படிப் போகிறது பார்த்தீர்களா? நிர்ணயிக்கப்பட்ட குறைந்த குத்தகைகூடச் சரியாக வசூலாகாத நிலைதானே இருந்துவருகிறது? இது போன்ற சொத்து உள்ள கோயில்களின் வருவாய் சரியாக இருந்தால் பாழடைந்து உள்ள எத்தனை ஆலயங்களில் விளக்கு ஏற்றி வைக்கமுடியும்? எத்தனை கருணை இல்லங்களைத் திறந்து ஆதரவற்ற அனுதைக் குழந்தைகளுக்கு வாழ்வளிக்க முடியும்?

பேட்டைவாய்த்தலையை அடுத்துள்ள பொய்யாமணி கிராமத்தில் சிதம்பரேஸ்வரர் கோயில் இருக்கிறது. இந்தக்கோயிலுக்குச் சம்பந்தப் பட்ட அரவாண்டியம்மன் கோயில், விநாயகர் கோயில், ஏகிரியம்மன் கோயில், மாரியம்மன்கோயில், பெருமாள்கோயில், உறுமனுர் ஐயனுர் கோயில் ஆகியவைகளுக்குச் சுமார் 110 ஏக்கர் நிலம் இருக்கிறதாம். இந்தக் கோயிலுக்கு இவ்வளவு நிலம் இருக்கிறது என்ற தகவலே தெரியாதவர்களும் இந்தக் கிராமத்தில் இருக்கிருர்கள். அரவாண்டியம்மன் கோயில் முன்மண்டபம் இடிந்துபோய் கிடக்கிறது. பெருமாள் கோயில் இடிபாடுகளாகப் பழுதடைந்துநிற்கிறது. சிதம்பரேஸ்வரர் கோயிலும் பாழடைந்த நிலையில்தான் இருக்கிறது. உற்சவமூர்த்தி இருக்கும் அறைக்குச் சரியான கதவுகூட இல்லாமல் இருக்கிறது.

செலவைக்குறைப்பதற்காக இந்தக் கோயிலில் இருந்த காவலாளியை நீக்கிவிட்டார்கள். சிலைகள் திருட்டுப்போனுல் தடுப்பதற்கு வழியில்லை. பாதுகாப்பான நல்ல கதவுகூட இல்லை. இந்தக் கோயில்களில் வேலைசெய்யும் ஆறு சிப்பந்திகளுக்கு மாதாமாதம் சம்பளமும் சரியாகப்போய்ச்சேருவதில்லை. கோயில் நிலைமை இப்படியிருக்க இந்தக் கோயிலின் நிலத்தை ஒருவிவசாயி 5 ஏக்கருக்கும் சேர்த்து வருடத்திற்கு 250 ரூபாய் குத்தகைக்கு வைத்து இருப்பதாகவும், அந்தக் குத்தகையையும் 10 ஆண்டுகளுக்குமேலாகத் தருவதில்லை என்றும் கேள்விப்பட்டு வியப்படையாமல் இருக்கமுடியவில்லை. இன்னெருவர் 2 ஏக்கர் கோயில் நிலத்தை 5 ஆயிரம் ரூபாய்க்கு மற்ருெருவரிடம் போக்கியம் (அடகு) வைத்திருப்பதாகவும் கூறுகிருர்கள். இதுபோல் எத்தனையோ உதாரணங்கள். கோயில் நிலத்தை வைத்திருப்பவர்கள் அதை அனுபவிக்கும் உரிமையை மற்றவர்களுக்கு எழுதிக்கொடுத்துவிட்டுப் பணம் வாங்கிக்கொள்வது சர்வசாதாரண நடைமுறையாக உள்ளது.

1972-ஆம் ஆண்டு அப்போதைய தி. மு. க. அரசு 1382-ஆம் பசலியில் யார் குத்தகை செலுத்திஞர்களோ அவர்கள் அதற்கு முந்திய பசலிகளுக்கான பாக்கியைச் செலுத்தவேண்டியதில்லை என்று உத்தரவிட்டது. அதனைத் தொடர்ந்து கடன் நிவாரணச் சட்டம் வந்தது. அதிலிருந்து விவசாயிகள் கோயில்நிலங்களுக்குச் சரியாகக் குத்தகை செலுத்துவது இல்லை. அதனுல்தான் 110 ஏக்கர்

நிலம் இருந்தும் பொய்யாமணி கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்குத் தரப்படுகின்ற 55 ரூபாய் சம்பளத்தையுங்கூட மாதாமாதம் தரமுடியாத நிலைமை இருக்கிறது.

தமிழ்நாட்டில் நிலமும், வருமானமும் இல்லாத எத்தனையோ ஆயிரக் கணக்கான கோயில்கள் பூஜை இல்லாமல் பூட்டிக் கிடக்கின்றன. அறநிலைய ஆட்சித்துறை மேற்கொண்ட பல நூற்றுக் கணக்கான கோயில்களில் ஆலய சிப்பந்திகளுக்குச் சம்பளம்தர வழியில்லாத நிலைதான் இருந்துவருகிறது. பழனி கோயில் வருமானத்தில் இருந்து ஒருகோடிரூபாயை எடுத்துக் கடந்த ஆண்டு வருமானமில்லாத பல கோயில்களில் சிப்பந்திகளுக்குச் சம்பளம் தரப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலைமைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இருக்கின்ற கோயில் சொத்துக்கள் எந்த அளவுக்கு விழிப்புடன் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை உணரமுடியும். ஆலய வருமானங்களை அதிகரித்தாகவேண்டும். வழிபாடு வசதிகளை விரிவுபடுத்தியாகவேண்டும். சமயத்துறை வளர ஆலயங்கள் புத்தொளிபெற்றாகவேண்டும். தனிப்பட்ட யாரோ கோயில் சொத்துக்களையும் வருமானங்களையும் தங்கள் விருப்பம்போல் கையாண்டு வரும் நிலைமையை மாற்றியாகவேண்டும். இதற்கு வழி என்ன?

கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் அனைத்தையும் அரசு தனது நேரடிப்பொறுப்பில் கொண்டுவந்தாக வேண்டும். குத்தகைதாரர் கடன் நிவாரணச் சட்டத்தில் இருந்து கோயில் நிலங்களுக்கு விதி விலக்கு அளிக்கப்படவேண்டும். மற்ற அரசாங்கக் கடன்களை வசூல்செய்வதுபோல் கோயில்நிலக் குத்தகையையும் கட்டாயமாக வசூல் செய்ய வேண்டும். பினாமி பெயர்களில் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த வசதிபடைத்தவர்கள் கோயில் நிலங்களை ஏராளமாக வைத்து அனுபவித்துக்கொண்டிருப்பதைக் கண்டுபிடிக்கவேண்டும். கோயில் நிலங்களுக்குக் குத்தகை எவ்வளவு என்பதை எல்லாக் கோயில்களுக்கும் ஒரேமாதிரியாக அரசாங்கமே நிர்ணயம் செய்து அறிவிக்கவேண்டும். நன்செய், புன்செய் நிலங்களுக்குத் தனித்தனியான குத்தகை விகிதத்தை அரசு நிர்ணயிக்கலாம்.

நூறு ஏக்கருக்கும் அதிகமான நிலமுள்ள ஆலயங்களில் அரசாங்கமே விவசாயப் பண்ணைகளை அமைத்துப் படித்த இளைஞர்களுக்கும், கிராமப்புற விவசாயக் கூலி தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பைத் தரலாம். இப்படிச் செய்வதன்மூலம் அரசாங்கத்திற்குக் கோயில் நிலங்களின்மூலம் கிடைக்கும் வருவாய் பன்மடங்குபெருகும். அதோடு விவசாயத்தை அரசாங்க உத்தியோகமாக்க நினைக்கின்ற

மனோபாவம் இந்தப் பண்ணைகளில் பணிபுரியும் இளைஞர்கள்மூலம் நாடெங்கும் பரவ வழிவகுக்கும்.

திருச்சி, தஞ்சை மாவட்டங்களில்மட்டும் நிறைய நிலமுள்ள கோயில்கள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன. தமிழ்நாடு முழுவதும் எத்தனை ஆயிரம் கோயிலின் சொத்துக்கள் தனிப்பட்டவர்களின் ஆடம்பர வாழ்வுக்குப் பயன்பட்டு வருகின்றனவோ தெரியாது. அரசு இவைகளைக் கவனித்துக் கடுமையான நடவடிக்கைகளின் மூலம் கோயில் நிலங்களை வைத்திருப்போரிடம் இருந்து குத்தகையைக் கண்டிப்பாக வசூல்செய்வதன்மூலம் கோடிக்கணக்கான ரூபாயை ஆண்டுதோறும் வருமானமாகப் பெறலாம். இந்த வருமானத்தைக்கொண்டு எல்லாக்கோயில்களுக்கும் நிர்வாக அதிகாரிகளை நியமிக்கலாம். இதன்மூலம் தமிழ்நாட்டில் பத்தாயிரத்துக்கும் அதிகமான படித்த இளைஞர்கள் வேலை பெறுவார்கள். கருணை இல்லங்களை, கல்விச் சாலைகளைத் திறந்து, பல லட்சக்கணக்கான ஆதரவற்ற அனாதைக் குழந்தைகளையும், ஏழைக் குழந்தைகளையும் உணவுடன் கல்வியும் கொடுத்துக் காப்பாற்றமுடியும். கோயில் சொத்துக்களை முழுமையாகச் சமுதாயத்திற்கே பயன்படுத்தமுடியும்.

வரும் மேமாதத்திற்குள் கோயில்களுக்கு அரசு டிரஸ்டிகளை நியமனம் செய்யப்போவதாகக் கூறப்படுகிறது. பெரிய கோயில்களுக்கு டிரஸ்டி (அறங்காவலர்) களை நியமிப்பதற்குமுன்னால் கோயில் சொத்துக்களை யாரும் துஷ்பிரயோகம் செய்யமுடியாத வகையில் ஆலய நிர்வாக முறையைத் தூய்மைப்படுத்த நடவடிக்கை எடுப்பது வரவேற்கக் கூடிய ஒரு அடிப்படையாக இருக்கும்

நன்றி ! — தினமலர், 30—4—78

---

## குருமணியின் அருளாசிகளிலிருந்து திரட்டிய
## அருள் ஞானக் கொடை

### யாரைப் பின்பற்றுவது ?

வள்ளுவரே நல்லோராகிய சிறுபான்மையினரைத்தான் பின்பற்ற வேண்டும் என்கிறார். இக்காலத்தில் சில தீமையான காரியங்கள் பெரும்பாலும் நடக்கின்றன. நல்ல செயல்கள் சிறுபான்மையாக நடக்கின்றன. எனவே பெரும்பான்மை என்பதற்காகத் தீமைகளை ஏற்றுக் கொள்ள முடியுமா? ஏற்றுக்கொள்ளத்தான் செய்வோமா? அல்லது சிறுபான்மை என்பதற்காக நல்லவைகளை ஒதுக்கிவிடுவோமா? எனவே பெரும்பான்மை சிறுபான்மை என்ற கண்ணோட்டத்தில் இராமல் நல்லவைகளைப் பின்பற்றி நாடும் வீடும் நலம் பெறப் பாடுபட வேண்டும்.

— இரா செ.

# உருத்திராக்ஷத்தின் தோற்றமும் அதன் பெருமையும்

பிரவசனரத்நம், வியாகரணசிரோமணி, இந்திவிசாரத்,

**திரு. P. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்**

( மலர் 37, இதழ் 5, பக்கம் 125 இன் தொடர்ச்சி )

### மும்முக உருத்திராக்ஷம்

இது அக்னிஸ்வருபமேயாகும். இதைஅணிவதால் ஸ்திரீபாவம் தொலேயும். "ஓம் ரம் ஈம் ஹ்ரீம் ஹ்ரூம் ஓம்" என்ற மந்திரத்தை உருத்திராக்ஷமாலேயால் ஜபம் செய்தால் எல்லாச் சாதனங்களும் கைகூடுகின்றன. சிறந்த வித்தைகளிலும் தேர்ச்சி ஏற்படும்.

அஸ்ய ஸ்ரீ அக்னிமந்தரஸ்ய வசிஷ்ட : ரிஷி :। காயத்ரீ சந்த : அக்னி : தேவதா । ஹ்ரீம் பீஜம் । ஹ்ரூம் சக்தி : । சதுர்வர்கஸித்யந் த்த ருத்ராக்ஷ தாரணார்தே ஜபே விநியோக :। வஸிஷ்டரிஷயே நம : சிரஸி ! காயத்ரீசந்தஸே நமோமுகே। அக்னிதேவதாயை நமோ ஹ்ருதி। ஹ்ராம் பீஜாய நமோ குஹ்யே। ஹூம் சக்தி த்யை நம : பாதயோ :।

### அடுத்து கரநியாசம்

ஓம் ஓம் அங்குஷ்டாப்யாம் நம : ஓம் ரம் தர்ஜ னீப்யாம் ஸ்வாஹா ஓம் இம் மத்யமாப்யாம் வஷட் । ஓம் ஹ்ரீம் அ நாமிகாப்யாம் ஹூம் ஓம் ஹ்ரூம் கநிஷ்டிகாப்யாம் வௌஷட் । ஓம் ஓ ம் கரதலகர ப்ருஷ்ட யாப்யாம் பட்.

### அடுத்து அங்கநியாசம்

ஓம் ஓம் ஹ்ருதயாய நம : ஓம் ரம் சிரஸே ஸ்வாஹா । ஓம் ஈம் சிகாயை வஷட் । ஓம் ஹ்ரீம் கவசாய ஹூம் । ஓம் ஹ்ரூம் நேத்ரத்ரயாய வௌஷட் । ஓம் ஓம் அஸ்திராய பட்.

### நான்முக உருத்திராக்ஷம்

இது பிரும்மாவேதான். இந்தமாலையையணிபவர் கொலைபாதகத் திலிருந்துவிடுபடுவார். இதைப்பார்த்தல், பூஜித்தல், ஓம், வாம், க்ராம், தாம், ஹாம், ஈம் என்ற மந்திரத்தை நான்முக உருத்திராக்ஷ மாலையால் ஜபம் செய்தல் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற நான்கு புருஷார்த்தங்களும் சித்திக்கும்.

### அணியும் முறை

ஓம், வாம், க்ராம், தாம், ஹாம், ஈம் என்பது மந்திரமாகும்.

அஸ்யஸ்ரீ பிரும்மாமந்த்ரஸ்ய பார்கவ : ரிஷி: அனுஷ்டுப் சந்த : பிரும்மா தேவதா, வாம் பீஜம் க்ராம் சக்தி : | அபீஷ்டஸித்யர்த்தே ருத்ராக்ஷதாரணார்த்தே ஜபேவிநியோக: | பார்க்கவ ரிஷயே நம: சிரஸி அனுஷ்டுப் சந்தஸே நமோமுகே பிரும்மா தேவதாயை நமோ ஹ்ருதி | வாம் பீஜாய நமோ குஹ்யே | க்ராம் சக்தயே நம: பாதயோ :

### கரநியாஸம்

ஓம் ஓம் அங்குஷ்டாப்யாம் நம : ஓம் வாம் தர்ஜநீப்யாம் ஸ்வாஹா. ஓம் க்ராம் மத்யமாப்யாம் வஷட். ஓம் தாம் அநாமிகாப்யாம் ஹூம், ஓம் ஹாம் கநிஷ்டிகாப்யாம் வௌஷட். ஓம் ஈம் கரதலகர ப்ருஷ்டாப்யாம் பட்.

### அங்கநியாஸம் :

ஓம் ஓம் ஹ்ருதயாய நம : ஓம் வாம் சிரஸே ஸ்வஹா. ஓம் க்ராம் சிகாயை வஷட். ஓம் தாம் கவசாய ஹூம் ஓம் ஹாம் நேத்ரத்ரயாய வௌஷட். ஓம் ஈம் அஸ்த்ராய பட்.

### தியானம்

ப்ரணம்ய சிரஸா சச்வத் அஸ்டவக்த்ரம் சதுர்முகம்
காயத்ரீ ஸஹிதம் தேவம் நமாமி விதி மீச்வரம் ||

எட்டு வாய் நான்கு முகம் கொண்டு காயத்ரியோடு கூடிய பிரும்மதேவனை அடிக்கடி வணங்குகிறேன்.

## ஐந்துமுக உருத்திராக்ஷம்

இது காலாக்னி (ருத்ர) ரூபமாகும். இதைக் காலாக்னிருத்ராக்ஷம் என்றும் கூறுவதுண்டு. ஓம் ஹ்ராம் ஆம் க்ஷம்யௌம் ஸ்வாஹா என்ற மந்திரத்தை ஐந்துமுக உருத்திராக்ஷமாலையால் ஜபம் செய்தால் எல்லா விருப்பமும் நிறைவேறும். கடைசியில் மோக்ஷமும் கிட்டும். தகாத ஸ்திரீசேர்க்கையாலும் உண்ணத்தகாத பொருளைச் சாப்பிட்டாலும் ஏற்படும் பாவங்கள் அழிகின்றன.

## அணியும் முறை

ஓம் ஹ்ரம், க்ரீம், ஹ்ரீம், ஸௌம் என்பது மந்திரம்.

அஸ்யஸ்ரீ மந்த்ரஸ்ய ப்ரம்மா ரிஷி : | காயத்ரீ சந்த : | ஸதாசிவ காலாக்னிருத்ரோ தேவதா | ஓம் பீஜம் | ஸ்வாஹா சக்தி : | அபீஷ்ட ஸித்யர்த்தே ருத்ராக்ஷ தாரணார்த்தே ஜபே விநியோகஃ | பிரும்மா ரிஷயேநமஃ சிரஸி | காயத்ரீ சந்தஸே நமோ முகே | ஸ்ரீ ஸதாசிவ காலாக்னி ருத்ர தேவதாயை நமோ ஹ்ருதி | ஓம் பீஜாய நமோ குஹ்யே | ஸ்வாஹா சக்தயே நம : பாதயோ :

## அடுத்து கரந்யாஸம்

ஓம்-ஓம் அங்குஷ்டாப்யாம் நம : | ஓம் ஹாம் தர்ஜநீப்யாம் ஸ்வாஹா | ஓம் ஆம் மத்யமாப்யாம் வஷட் | ஓம் க்ஷம்யௌம் அநாமிகாப்யாம் ஹூம் ஓம் ஸ்வாஹா கநிஷ்டிகாப்யாம் வௌஷட் | ஓம் ஹாம் ஆம் க்ஷம்யௌம் ஸ்வாஹா. கரதல கரப்ருஷ்டாப்யாம் பட் |

## அடுத்து அங்கந்யாஸம்

ஓம் ஓம் ஹ்ருதயாயநமஃ | ஓம் ஹ்ராம் சிரஸே ஸ்வாஹா. ஓம் ஆம் சிகாயை வஷட் | ஓம் க்ஷம்யௌம் கவசாய ஹூம். ஓம் ஸ்வாஹா நேத்ரத்ரயாய வௌஷட் | ஓம் ஹ்ராம் ஆம் க்ஷம்யௌம் ஸ்வாஹா அஸ்த்ராய பட் |

## அடுத்து தியானம்

ஹாவபாவ விலஸார்த நாரிகம் பீஷணார்த்த மதவா மஹேச்வரம் தாசஸோத்பல கபால சூலிநம் சிந்தயே ஜபவிதௌ விபூதயே ||

(தொடரும்)

உ
சிவமயம்

# ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ **சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின்** மாத ஜன்மநட்சத்திரத் திருநாளை முன்னிட்டு, **காளயுக்தி ஆண்டு சித்திரைத்திங்கள் 31-ஆம்நாள் (14-5-78) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் திருநெடுங்களம் ஸ்ரீ ஒப்பிலாநாயகி உடனுறைய ஸ்ரீ நித்தியசுந்தரர் திருக்கோயிலிலும் மாலை 6-மணியளவில் திருவெறும்பியூர் ஸ்ரீ நறுங்குழல்நாயகி உடனுறைய ஸ்ரீ எறும்பீசர் திருக்கோயிலிலும்** சிறப்பு வழிபாடு நடைபெறும்.

## திருநெடுங்களத்தில் :

தலைவர் :— **திரு. S. மகாலிங்கம், B. Sc., அவர்கள்**
நிர்வாக அதிகாரி, ஸ்ரீதாயுமான சுவாமி திருக்கோயில்.

சொற்பொழிவு:—
**வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.**
" இடர்களையும் திருப்பதிகம் "

## திருவெறும்பியூரில் :

தலைவர்:— **திரு. ப. மூக்கப்பிள்ளை அவர்கள்**
தலைவர், அருள்நெறித் திருக்கூட்டம், திருச்சிராப்பள்ளி.

சொற்பொழிவுகள்:—
**வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.**
" ஞானசம்பந்தர் "

**திரு. மு. வைத்தியநாதன்,**
" அப்பர் "

**இலஞ்சி. திரு. அ. இ. முத்துக்குமாரசாமி**
" சுந்தரர் "

அனைவரும் வருக ! வழிபட்டு உய்க ! அரன் அருள் பெறுக.

# செய்திகள்

## ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு.

• தருமையாதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக கேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் மாத ஜன்ம நட்சத்திர வழிபாடு 17—4—78 திங்கட்கிழமை யன்று காலை உறையூர் என வழங்கப்படும் திருமூக்கீச்சரம் ஸ்ரீபஞ்சவர்ணேசுவரர் திருகோயிலிலும், மாலை திருச்சிராப்பள்ளி ஸ்ரீ தாயுமானவர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டின் போது திருமூக்கீச்சரம் திருச்சிராப்பள்ளி திருப்பதிகங்கள் என்ற நூல் வெளியிட்டு வழங்கப்பட்டது. அவ்வத்தலங்களிலும் தேவார திருப் பதிக பாராயணம் நிகழ்த்தப் பெற்றது. வழிபாட்டிற்குப் பிறகு உறையூரில் அகில இந்திய வானொலி நிகழ்ச்சிப் பொறுப்பாளர் திரு. விஜயதிருவேங்கடம் அவர்கள் தலைமையில் சமயவிரிவுரைக் கூட்டம் நிகழ்ந்தது. தருமையாதீனப்புலவர் திரு. வி.சா.குருசாமிதேசிகர்எம்.ஏ. அவர்கள் 'சிவலிங்க தத்துவம்' என்ற தலைப்பிலும் திருச்சிராப்பள்ளி புலவர். திரு. மு. வைத்தியநாதன் 'மூவர் தமிழ்' என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினார்கள்.

• திருச்சிராப்பள்ளி மலைக்கோயில் சித்ர மண்டபத்தில் மாலை 6-30 மணியளவில் திருச்சிராப்பள்ளி செந்தமிழ்க் கவிதைச் செம்மல் திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் சமய விரிவுரைக் கூட்டம் நடைபெற்றது. திருச்சிராப்பள்ளி இலஞ்சி, திரு. முத்துக்குமரசாமி அவர்கள் தாயுமானவர் என்ற தலைப்பிலும், தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ. அவர்கள் 'ஞானசம்பந்தர்' என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினர்கள். ஆங்காங்கும் அன்பர்கள் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டும் விரிவுரைகளைக் கேட்டுப் பயன் பெற்றனர்.

சித்திரைத்திங்கள் ஆயில்யத்திருநாள் (17—4—78) ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஆண்டு ஜன்மநட்சத்திரம் ஆதலின் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அபிராமியம்மை உடனுகிய ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. அன்று மிருத்தியுஞ்ஜயஹோமம், ஏகாதச ருத்ரஜெபம் முதலியனவும் அபிஷேக ஆராதனைகளும் அருச்சனை களும் சிறப்பாக நடைபெற்றன. திருமுறைப் பாராயணம் அபிராமி

அந்தாதி பாராயணம் முதலியனவும் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினர்கள். அன்பர்கள் பலர் வழிபட்டுப் பயன் பெற்றனர்.

## உமாபதிதேவ நாயனர் குருபூஜைவிழா

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் சந்தாளு சாரியருள் நான்காமவராகிய உமாபதி தேவ நாயனரின் திருநட்சத்திர மாகிய சித்திரை அஸ்தத் திருநாளில் சமயாசாரியர் சந்தானசாரியர் களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் 21—4—78 வெள்ளிக் கிழமை காலை சிறப்பாக நடைபெற்றன. மாலை வித்துவான். திரு. கி. ம. கண்ணப்பன் உமாபதிதேவ நாயனர் அருள்வரலாறு என்ற தலைப்பிலும், பேராசிரியர் வித்துவான் திரு. மு. ஆறுமுக தேசிகர் 'உமாபதி தேவர் அருள் நூல்கள்' என்ற தலைப்பிலும் விரிவுரை யாற்றினர்கள், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கியருளினர்கள். அன்பர்கள் வழிபட்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

## சித்திரைத்திங்கள் விழா

**சீர்காழி :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீர்காழி சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத்திங்கள் பெருவிழா 13—4—78 வியாழக்கிழமை முதல் தொடங்கிச் சிறப்பாக நடைபெற்றது.

14—4—78 வெள்ளிக்கிழமை தமிழ் வருடப்பிறப்பு நாளாதலின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தில்லை நடராஜப்பெருமானைத் தரிசித்து சீர்காழிக்கு எழுந்தருளினர்கள். திருஞானசம்பந்தர் பிரம தீர்த்தக் கரைக்குச் சிவிகையில் எழுந்தருளியானதும் ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள் அற்புத விளக்க விரிவுரையைத் தொடங்கி வைத்து அருளாசி வழங்கினர்கள். மதுரை சிவகாமி மில் அதிபர் திரு. கருமுத்து சு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் தேவாரத் திருப்பதிகங்களின் பயன்களை விளக்கிச் சிறப்புரையாற்றினர்கள். தொடர்ந்து வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், டாக்டர் சொ. சிங்காரவேலன் எம். ஏ. பி. எச். டி., திரு. கு. சுந்தர மூர்த்தி எம். ஏ., திரு. வி. சபேசன், திருமதி. ப. நீலா எம். ஏ., திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., திரு மு. சிவச்சந்திரன் எம். ஏ., ஆகியோர் அற்புத விளக்க விரிவுரையாற்றினர்கள். பிரம தீர்த்தக் கரையில் திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் வழங்கும் அருட் காட்சி நிகழ்ந்த பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

வேளூர் தேவஸ்தானம் திருமுறைப்பணியாளர் திரு. க. சொக்கலிங்க ஓதுவார் அவர்களுக்குத் 'திருமுறைக்கலாநிதி' பட்டமும் 1001 ரூ. கொண்ட பணமுடிப்பும் அருளிப் பொன்னுடை போர்த்தி ஆசி வழங்கியருளினார்கள். ஆயிரக்கணக்கான பக்தர்கள் திருமுலைப்பால் காட்சியைக் கண்டு இம்மை மறுமைப் பயன் பெற்றனர்.

14—4—78 அன்று மாலை திரு நெறியத் தெய்வத்தமிழ் மாநாடு திருஞானசம்பந்தர் திருக்கோயிலில் நடைபெற்றது. சீர்காழி நிலக்கிழார் திரு. K. அருணசல முதலியார் அவர்கள் திரு. கருமுத்து சு. சொக்க லிங்கம் செட்டியார் அவர்கள் தொடக்கவுரை சிறப்புரைகளோடு மாநாடு தொடங்கியது. புலவர் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., அவர்கள் "ஞானசம்பந்தர் காலத்துச் சமுதாயநிலை" என்ற தலைப் பிலும், அண்ணமலைப் பல்கலைக்கழகம் திரு. கு. சுந்தரமூர்த்தி எம்.ஏ., அவர்கள் "ஞானசம்பந்தர் காலத்துச் சமயநிலை" என்ற தலைப்பிலும் உரைக்கோவை நிகழ்த்தினர்கள். சிதம்பரம், புலவர். திரு. வா.ச. சுந்தரேசம் பிள்ளை அவர்கள் குழுவினரால் ஆடல் பாடல் நிகழ்ச்சி ( தேவாரப் பாடல்களுக்கு அபிநயம் ) நடைபெற்றது,

15—4—78 சனிக்கிழமை மாலை "திருஞானசம்பந்தர் தேவாரத்தில்' விஞ்சி நிற்பது பக்திச் சுவையா? இலக்கியச் சுவையா? என்ற பொருள் பற்றிய பட்டிமண்டபம் நிகழ்ந்தது. சீகாழி நிலக்கிழார் திரு. எஸ். விசுவநாத முதலியார் பி. ஏ., அவர்கள் தொடக்கவுரைக்குப் பின் திரு. பேராசிரியர். திரு. வ. காந்திமதி நாதன் பி. ஏ., அவர்கள் நடுவராக அமர்ந்து பட்டிமண்டப நடை முறைகளை விளக்கிப் பேசினர்கள். இலக்கியச் சுவையே என்ற பொருள்பற்றிப் புலவர். திரு. சோம. இளவரசு, வித்துவான். திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ., புலவர். எஸ். வசந்தா, ஆகியோர் வாதிட்டனர். பக்திச் சுவையே என்ற பொருள்பற்றி திரு. அ. கலிய பெருமாள் எம். ஏ., திரு. சி. சிவச்சங்கரன் எம். ஏ., புலவர். இராதா ஜெயலெட்சுமி ஆகியோர் வாதிட்டனர். "பக்திச் சுவையே விஞ்சி நிற்பது" என்று நடுவர் தீர்ப்புக் கூறினர்கள்.

16—4—78 ஞாயிற்றுக்கிழமை மாலை திருமுறை விழாவும், தேவாரவகுப்பு ஆண்டுவிழாவும் நடைபெற்றன. சீகாழி நிலக்கிழார் திரு. R. வைத்தியநாத முதலியார் பி. எஸ்சி., அவர்கள் தொடக்க வுரைக்குப் பின் செந்தமிழ்ப் புரவலர் திரு. இரா. இராஜசேகரன் பி. எஸ்சி., பி. எல்., அவர்கள் சிறப்புரையும் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ. அவர்கள் "மூவர்தமிழ்" என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரையும் நிகழ்ந்தன. தொடர்ந்து வேளூர் திரு. க. சொக்கலிங்க ஓதுவார், சீகாழி திரு. S. திருஞானசம்பந்த ஓதுவார் குழுவினரின்

( தொடர்ச்சி 298 ஆம் பக்கம் பார்க்க )

# எதிர்காலம்

ஜோதிஷம், திரு. A. இராசமாணிக்கம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

**( காளயுக்திஞ வைகாசிமீ 1௨ முதல் 31௨ முடிய )**

**( 15—5—1978 முதல் 14—6—1978 முடிய )**

காளயுக்திஞ சித்திரைமீ 31௨ பானுவாரம் ஆயில்யநக்ஷத்திரம் வணிசைகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 36 நாழிகை 59 விஞடிக்கு தனுர் லக்தினத்தில் ஸ்ரீலோகரட்சகரான சூரியபகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு மேஷராசியிலிருந்து ரிஷபராசி சங்கிரமணமாக வைகாசிமாதப் பிரவேசம் செய்தருளுகிறுர். அன்று விஷ்ணுபதி புண்ணியகாலமாகும். மறுதினம் சோமவாரம் வைகாசி மாதம் முதல் தேதியாகிறது. அன்று சாந்திரமானரீதியில் வைசாக சுத்த அஷ்டமி திதியாகும். உதயம்முதல் 9நாழிகை 12விஞடிக்குச் சிம்மசந்திரன் ஆகும். சங்கிரம கால பலஞவது சர்வேஸ்வரனுடைய கிருபையில் லோகத்தில் ஆன்ருேர்களால் தேசத்தலைவர்களால் லோக தர்மம் முதலான கைங்கரியங்களும் மனுநீதி பரிபாலனமும் செம்மையாக நடைபெற்றுவரும். கடகராசியில் வக்கிரத்தில் செவ்வாய் சனி சேர்ந்திருக்கின்ற இக்காலத்தில் லோகமாந்தர்களுக்கு ஏற்படுகின்ற பிராணவியோகம் விபத்து ஆகியவற்றின் பாபம் நீங்க அருந்தவத்தோர்களால் தெய்வபூசனைகள் நடைபெற்றுவரும். உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் திருவீற்றிருக்கின்ற தவசீலர்களான குருமகான்கள், பரமாசாரியர்கள் இயம்புகின்ற ஞானவழியில் தேவாலயங்களில் எங்கும் தெய்வ ஆராதனைகள் தேவதா வழிபாடுகள் சிவாசாரநியமம் வழுவாமல் நடைபெற்றுவரும். அன்ஞரின் திருநோக்கில் லோக சுபிட்சார்த்த வேள்விகள், வேதபாராயணங்கள், ஆங்காங்கு ஆலயங்களில் ஈஸ்வரநாம இலட்ச கோடி அருச்சனைகள் நடைபெற்றுவருவதினின்று லோகத்தில் சுபிட்சநிலைமை ஏற்படும். லோகமக்கள் அனைவரும் ஈஸ்வரபக்தியுடன் இனிது வாழ்வார்கள்.

**1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

( சு. சே. சோ. லா. - வி. லு. லே. லோ. - அ. )

மேஷராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் கணிசமாக பண வரவுகள் வந்துகொண்டிருக்கும். அதற்குச் சமனுக

செலவுகளும் ஆகும். 10உ முதல் வித்துவத்துவத்தில் எழுந்துத் துறையில் சிறப்பு மேலிடும். சகோதரருக்கு அரசாங்கத்தில் நன்மை ஏற்படும். வாகனசுகம் திருப்தியளிக்கும். புத்திரனின் கல்வி தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். வழக்கு விவகாராதிகளில் சாதகநிலைமையை உருவாக்கும். தாம்பத்திய வாழ்வு தெய்வபக்தியாகத் தான தர்ம நியமத்துடன் நடந்துவரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

**2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ - உரோகிணி – மிருகசீர்ஷம் $\frac{1}{2}$**

( இ. ஊ. ஏ. - ஒ. வ. வி வூ - வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பத்தில் பண வருமானங்கள் திருப்திகரமாக வந்துகொண்டிருக்கும். சகோதரருக்குச் சௌக்கியம்தரும். பூமி இயந்திர சாதனங்களில் நற்பலன் தரும். வித்தியாவியாபாராதிகளில் பிரபலம் தரும். வெளியூர் பயணங்கள் மேலோர் பெரியோர்களின் சந்திப்பு நன்மைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். புத்திரனுக்கு வித்துவத்துவத்தில் புகழ்தரும். தன்மனைவிக்குப் பித்தாதிக்கமாக இருப்பினும் பாதிக்காது. செய் தொழிலில் நற்பலன் உண்டாகும். சனி ஞாயிறு சுபமாகும்.

**3. மிதுனம் :- மிருகசீர்ஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை – புனர்பூசம் $\frac{3}{4}$**

( கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் தனவரவுகள் கண்ய நிலைமையில் வந்துகொண்டிருக்கும். சகோதரர் பிதா இவர்களின் நலனில் பெரும் செலவும் ஏற்படும். சொத்துப்பிரச்சினையில் விவாதம் ஏற்படினும் மாத பின் பகுதியில் சுமுகமான நிலைமையை ஏற்படுத்தும். மனோதைரியப் போக்கில் எல்லாக்காரியங்களும் வெற்றிகரமாக செயல்படும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். செய்தொழிலில் பிரசித்த நிலைமையாக இருந்துவரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

**4. கடகம் :- புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்**

( ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் நல்ல முன்னேற்றம் காணும். பணச்செலாவணி சரளமாக இருந்து வரும். சகோதரருக்கு மேன்மையுண்டாகும். வித்தியாவகை ஈடுபாடுகளில் உற்சாக நிலைமையும் வித்துவ ஜனங்களிடையே நேசமும் ஏற்படும். வாகனசுகம் திருப்தியளிக்கும். இல்லத்தில் சுபவிசேஷம் நடக்கும். வாழ்க்கையில் விருப்பு வெறுப்பு கலந்துகாணும். தார புத்திரர்களின் சௌகரியம் நன்றாக இருந்துவரும். செய்தொழிலில் அலுவல்கள் கம்பீரமாக நடந்துவரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

**5. சிம்மம் :- மகம் - பூரம் – உத்திரம் ¼**
(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்ம ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாபிவிருத்தியில் நல்ல முன்னேற்றமும் தனதாய சௌகரியங்களும் ஏற்படும். சகோதரிக்குக் குடும்பத்தில் சுபம் ஏற்படும். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் பிரசித்தம் ஏற்படும். கால்நடை ஜீவனங்களில் பசு பால் பிராப்தியில் சாதாரண பலனாக இருந்துவரும். பூமி இயந்திர சாதனங்களில் முன் முதலீடுகளை ஏற்படுத்தும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செய்தொழிலில் பிரசித்தமும் இலாபப் பிராப்தியும் ஏற்படும். சனி ஞாயிறு சுப மாகும்.

**6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½**
(டோ. பா. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும் பாபிவிருத்தியில் தனவரவுகள் சீராக இருந்துவரும். சகோதரர்கள் விசுவாசத்துடனும் அனுசரணையுடனும் இருந்து வருவார்கள். பூமி இயந்திரவகையில் நற்பலன்வரும். பிதாபுத்திரர்களால் அதிகச் செலவு ஏற்படும். மனைவிக்கு இரத்தக் கொதிப்பால் நலிவு வந்து உடன் குணமாகும். செய்தொழிலில் மேலிடத்திய அனுகூலங்களை ஏற் படுத்தும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

**7. துலாம் :- சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾**
(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலா ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் சொற்ப சிரமங்களும் பணவகைத் தட்டுப்பாடுகளும் தோன்றினும் தக்க சமயத்தில் மதிப்பாக பணம் வந்துசேரும். சகோதரருக்குச் சௌக்கியம் தரும். வித்தியா வியாபாரதிகளில் 10உ க்குமேல் நற்பலனைத்தரும். பூமி இயந்திர சாதனங்களில் சாதாரண பலனாக இருந்துவரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செய்தொழில்களில் காரியசாதனைகளை ஏற்படுத்தும். புதன் வியாழன் சுபமாகும்.

**8. விருச்சிகம் :- விசாகம் ¼ அனுஷம் – கேட்டை.**
(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிக ராசி 9 பாதங்களும் சுமார் பலனாகநடக்கும். குடும் பாபிவிருத்தியில் பண வகை லேவாதேவிகளில் நற்பலன் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். சகோதரருக்கு மனக்குறைவுக்கான சம்பவமும்

அதைச்சரிசெய்யும் நிலைமையும் ஏற்படும். பந்து மித்திரர்கள் மிச்சிர மான போக்கில் தென்படுவர். எழுத்துமூலிய காரியங்களில் மந்த நிலைமையாக இருந்து பின் சிலாக்கிய பலன் தரும். மனைவிக்கு உஷ்ணாதிக்கத்தினால் நரம்புக் கோளாறுகள் ஏற்பட்டு உடன் வைத்தியத்தால் குணமாகும். செய்தொழில்கள் நன் மதிப்புடன் நடந்து வரும். வெள்ளி சனி சுபமாகும்.

**9. தனுசு :- மூலம் – பூராடம் – உத்திராடம் ¼**
(யே. யோ. பா. பி. பு. த. ப. ட. - பே.)

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். குடும்பத்தில் மிதமிஞ்சிய செலவினங்கள் ஏற்பட்டாலும் எதிர்பாராத வருமானங் களால் நிலைமையைச் சரிசெய்துகொள்வதாகும். சகோதரருக்குக் கண்ட சம்பவம் வந்து தப்பும். வாசஸ்தலத்தில் வாகனாதிகளில் ஸ்திரி மூலிய சர்ச்சை வந்து நீங்கும். வித்தியாவகையில் எழுத்து மூலிய காரியங்களில் 10உ க்குமேல் முன்னேற்றம் அளிக்கும். புத்திரனுக்குச் சாதாரணமாக வாயுபீடிதம் ஏற்பட்டுக் குணமாகும். தாம்பத்திய வாழ்க்கை சுமுகமாக நடந்துவரும். செய்தொழிலில் அரசாங்க நன்மையை ஏற்படுத்தும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**10. மகரம் :- உத்திராடம் ¾ – திருவோணம் –அவிட்டம் ½**
(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரம் 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். குடும்பாபி விருத்தியில் தனவரவு செலவுகள் சரிசமனாக இருந்துவரும். சகோதரர் மனஸ்தாபம் சொத்து தகராறுகள் வந்து சரிபடும். சரீர நலம் பாதித்து உடன் குணமாகும். பந்து அம்மான்கள் மாத பின் பகுதியில் மாறு பட்டுக் காண்பர். ஞாயிற்றுக்கிழமை சூரியார்சனை செய்ய எல்லா விஷயத்திலும் நல்ல நிலைமையை ஏற்படுத்தும். தாரபுத்திரர் சம்பந்தமான கிலேசம் நீங்கும். செய்தொழில் அலுவல்கள் சிறு சர்ச்சைக்கிடையே நடைபெற்றுவரும். சனி ஞாயிறு சுபமாகும்.

**11. கும்பம் :- அவிட்டம் ½ – சதயம் பூரட்டாதி ¾**
(கு. கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். குடும்பத்தில் தனுதாய சௌகரியங்கள் நன்றாக இருந்துவரும். சகோதரருக்குச் சௌக்கிய பலன் தரும். வீடு வாகனாதிகளில் விருத்திபலன் ஏற்படும். பூமி இயந்திர சாதனங்களில் அபிவிருத்தி பலனைத்தரும். வித்தியா வியாபாரதி கலைத்துறையில் 10உ முதல் நற்பலன் தரும். தார சௌக்கியம் புத்திரர் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். வழக்கு விவகாராதிகளில் வெற்றிப்பாதையை உண்டுபண்ணும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

**12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.**

( தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி. )

மீன ராசி 9 பாதங்களும் சுமார்பலனை நடக்கும். குடும்பாபி விருத்தியில் தனச் செலாவணியில் நல்ல நிலைமையாக இருந்துவரும். இளைய சகோதரருக்குச் சௌக்கியம் தரும். மூத்த சகோதரருக்கு அல்லது சகோதரிவழியில் வியோகசம்பவம் ஆகும். வீடு வாகனாதி களின் சௌக்கியங்கள் திருப்தியளிக்கும். சபாபிரசங்கக் கீர்த்தியைக் தரும். மாத பின் பகுதியில் புத்திரர் சம்பந்தமாக உள்ள கவலை நீங்கும். விவகாரம் ஜெயிக்கும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். செய்தொழிலில் பிரபலம் ஏற்படும். புதன் வியாழன் சுபமாகும்.

---

( 293 ஆம் பக்கத் தொடர்ச்சி )

திருமுறை இசையரங்கும் தேவாரவகுப்பு மாணவர்களுக்குப் பரிசளிப்பும் யானைமேல் திருமுறை திருவீதியுலாக் காட்சியும் நடை பெற்றன.

17—4—78 திங்கட்கிழமை மாலை "மனுநீதிச்சோழன் மகன் மீது தேரைச் செலுத்தியது அரசநீதியன்று" என்ற பொருள்பற்றிய வழக்காடு மன்றம் நடைபெற்றது. திரு. ஆ. செகந்நாதன் எம். ஏ. அவர்கள் வழக்குத்தொடுக்க, புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., அவர்கள் எதிர்வழக்காடினார்கள். திருக்குறளார் திரு. வி. முனிசாமி பி. ஏ., பி. எல்., அவர்கள் நடுவராக அமர்ந்து மனுநீதிச் சோழன் தன் மகன்மீது தேரைச் செலுத்தியது அரச நீதியே என்று தீர்ப்பளித்தார்கள்.

18—4—78 செவ்வாய்க்கிழமை டாக்டர். திரு. சொ. சிங்கார வேலன் எம். ஏ., பி. எச்டி. அவர்கள் தலைமையில் "ஞானசம்பந்தர் வாழ்வியல் அற்புதங்கள்" என்ற பொருள்பற்றிய கவியரங்கம் நடை பெற்றது. "ஞானப்பால் உண்டது", "விடந்தீர்த்தது", "உலவாக் கிழிபெற்றது", "பஞ்சம்தீர்த்தது", "வாதில்வென்றது", "எலும்பு பெண்ணானது" என்றதலைப்புக்களில் முறையே திரு. ம. வே. பசுபதி, திரு. தொல்காப்பியன், திரு. தா. குருசாமி, திரு. முகிலன், திரு. மூ. க. சங்கரன், திரு. ஞானச்செல்வன் பி. ஏ., ஆகியோர் பாடல்கள் பாடிவந்து அரங்கேற்றம் செய்தனர். தொடர்ந்து சிதம்பரம் திரு. எஸ். எம். மொய்தீன் குழுவினரால் தயாரிக்கப்பெற்ற "சிவசக்தி" நடனம் சிறுவர் சிறுமியர் கலை நிகழ்ச்சியாக நடைபெற்றது.